தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600 006

ந.க.எண்.15945/ஜி1/இ1/07, நாள். 15–3–2007

02973

# தமிழ்நாடு அரசு

சுருக்கம்

கல்வி–பள்ளிக் கல்வி–புதிய அரசு மற்றும் தனியார் பள்ளிகள்– அரசு மற்றும் தனியார் பள்ளிகளை தரம் உயர்த்துதல்– அனைத்து வகை பள்ளிகளுக்கும் ஒரே நில அளவு நிர்ணயித்து ஆணையிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (டி1) துறை

அரசாணை (நிலை) எண். 49 நாள்: 1–3–2007

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (2டி) எண்.48, பள்ளிக்கல்வித் துறை, நாள் 21–7–04.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.3352/ஜி1/02, நாள் 6–12–06.

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும்போது கீழ்கண்டவாறு நிலப்பரப்பளவு இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மாநகராட்சி | – | 6 கிரௌண்டு |
| மாவட்டத் தலைமை இடங்கள் | – | 8 கிரௌண்டு |
| நகராட்சி | – | 10 கிரௌண்டு |
| பேரூராட்சி | – | 1 ஏக்கர் |
| ஊரகப் பகுதி | – | 3 ஏக்கர் |

2. தற்போது மாநிலத்தில் உள்ள வெவ்வேறு வகையான நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளுக்கு தேவைப்படும் நிலப்பரப்பாக வெவ்வேறு விதமான நில அளவுகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன என்றும் எனவே மேலே பத்தி–1ல் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நில அளவுகளையே அனைத்து வகையான நிர்வாகங்களின் கீழும் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கும் நிர்ணயம் செய்யுமாறும் கோரிக்கைகள் வந்துள்ளன. பள்ளிக் கல்வி இயக்குநரும் பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள தனது கடிதத்தில் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பளவையே அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கும் நிர்ணயம் செய்து ஆணையிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி – 2ல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று மேலே பத்தி – 1ல் குறிப்பிடப்பட்டுள்ள, மெட்ரிக்குலேஷன் பள்ளிகளுக்கான அங்கீகாரத்திற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்த பட்ச நிலப்பரப்பளவினை அனைத்து வகை நிர்வாகங்களின் கீழ் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கும் நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இப்பொருள் தொடர்பாக தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்கு முறைச் சட்டம் 1973ல் உள்ள தொடர்புடைய பிரிவுகளுக்கு உரிய திருத்தம் வெளியிட தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்
அரசு செயலர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6
நகல்
பள்ளிக் கல்வி B, E பிரிவுகள்
பள்ளிக் கல்வி X பிரிவு.
(அரசாணை பத்தி 4ல் தொடர் நடவடிக்கைக்காக)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒப்பம்/–
பிரிவு அலுவலர்.

/உண்மை நகல்/

அரசாணையின் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.

தனியார் பள்ளிகளின் துவக்க அனுமதி மற்றும் அங்கீகாரம் தொடர்பான கருத்துருக்களை மேற்படி அரசாணையின் அடிப்படையில் ஆய்வு செய்து அனுப்ப வேண்டும் என்றும், பள்ளி அமைந்துள்ள இடம் எந்த எல்லைக்குட்பட்டது என்பது குறித்து (மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி/ஊராட்சி/மாவட்டத் தலைமையிடம்) சார்ந்த வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து சான்று பெற்று இணைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கலாகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்.

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
நகல்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்–சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம்.
உபரி நகல்–10